மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு.திரு S.சோமசுந்தரம், எம்.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2017ஆம் ஆண்டு ஜீன் மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2048 ஹேவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 15 ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.125/2016**

ராஜேஸ்வரி .... வாதி

/எதிர்/

சாந்தி ... பிரதிவாதி

இவ்வழக்கு 23.06.2017 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். விஜயன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. அரசு தாயுமானவன் அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகையில்லாததால வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை:-**

பிரதிவாதி தாவா சொத்தினை வாதி வசம் ஒப்படைக்கக் கோரியும், அவ்வாறு ஒப்படைக்காத பட்சத்தில் சமூகம் நீதிமன்றமே தாவா சொத்துக்களை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு வசம் எடுத்து தர உத்தரவு வழங்கக்கோரியும், மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:-**

தாவா சொத்தானது வாதியின் மகனாகிய இறந்த திருக்குமரனால் 21.03.2007ம் ஆண்டு கிரயம் பெறப்பட்டு அது முதல் திருக்குமரனின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்தது. திருக்குமரன் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். அவர் இறப்பிற்கு பிறகு அவரது முதல் நிலை வாரிசான அவரது தாயார் வாதி தாவா சொத்தை அனுபவமும், சுவாதீனமும் செய்து வருகிறார். பிரதிவாதி தாவா சொத்தை விலைக்கு கேட்டு வாதி மறுத்துவிட்டதால் வாதி மீது ஆத்திரம் கொண்ட பிரதிவாதி வாதி

வெளியூர் சென்றிருந்ததை ஆக்கிரமித்து விட்டார். வாதி ஊர் முக்கியஸ்தர்களிடம் தெரிவித்தபோது தாவா சொத்தை வாதி வசம் ஒப்படைத்து விடுவதாக தெரிவித்த வாதி தற்போது தாவா சொதததை தன்னிடம் தான் விற்கவேண்டும் என்றும், வாதியின் வசம் ஒப்படைக்க இயலாது என்று தெரிவித்து வருகிறார். பிரதிவாதி ஆட்கள் பலமும், அரசியல் பலமும் மிக்கவர் என்பதால் தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து எடுத்து வாதி வசம் ஒப்படைக்க கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும், போதிய வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னரும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகததால் இவ்வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**4. இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,**

**1. வாதியின் இவ்வழக்கு அனுமதிக்கத் தக்கதா? என்பதே ஆகும்.?**

**5. <u>பிரச்சினை 1:-</u>**

இவ்வழக்கானது பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை எடுத்து வாதி வசம் ஒப்படைக்க கோரி இந்த வழக்கு வாதியால் பிரதிவாதிக்கு எதிராக கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அவரைப் பொறுத்து ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி கோரியுள்ள பரிகாரத்தைப் பொறுத்து வழக்கு சொத்தனது வாதியின் உரிமையிலும், அவருடைய அனுபவத்திலும் உள்ளது என்பதையும், வழக்குமூலத்தையும் நிரூபிக்க வேண்டிய கடமை வதியைச் சார்ந்தது ஆகும்.

8. இவ்வழக்கின் வாதி ராஜேஸ்வரி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 21.03.2007ம் தேதியில் தாவா சொத்தானது வாதியின் மகன் திருக்குமரன் பெயரில் கிரயம் வாங்கப்பட்டதற்குரிய அசல் கிரய ஆவணம் வ.சா.ஆ.1 ஆகவும், திருக்குமரன் பெயரில் ஏற்பட்ட அடங்கல் பதிவேட்டு நகல் வா.சா.ஆ.2 ஆகவும், தாவா சொத்திற்குரிய சிட்டா நகல் வா.சா.ஆ-3 ஆகவும், திருக்குமரனின் இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகவும், வாரிசரிமை சான்றிதழ் வா.சா.ஆ-5 ஆகவும் குறியிடப்பட்டுள்ளன.

9. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தை கவனமாக

பரிசீலிக்கையில் தாவா சொத்தானது 21.03.2007ம் தேதியன்று வாதியின் மகன் இறந்த திருக்குமரன் பெயருக்கு கிரய ஆவணம் ஏற்பட்டு அது முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. எனவே பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்தின் உரிமை மூலமானது திருக்குமரனின் வாரிசான வாதிக்கு உடமைப்பட்டது என்பதை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. மேலும், வா.சா.ஆ.2,3 ஆவணங்கள் மூலம் தாவா சொத்தானது வாதியின் மகனான இறந்த திருக்குமரன் பெயரில் உள்ள அடங்கல் பதிவேட்டு நகல் மற்றும் சிட்டா ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. வா.சா.ஆ.4 ஆவணமானது திருக்குமரன் இறந்ததற்கான இறப்பு சான்றிதழாக உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணமானது திருக்குமரன் இறப்பிற்கு பிறகு வாதி தான் முதல்நிலை வாரிசு என்பதை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது

**10.** வாதியின் தரப்பில், இவ்வழக்கின் வாதி வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டு இவ்வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்பதையும், அவருடைய அனுபவத்தில் வழக்கு சொத்தானது உள்ளது என்பதையும் வாதி தரப்பில் உரிய சான்றாவணங்கள் மூலம் தெளிவாக இந்திய சாட்சிய சட்டப்படி நிரூபக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, வழக்கு சொத்தானது வாதிக்கு சொந்தமாக அவருடைய அனுபவத்தில் உள்ள நிலையில் அதனை மறுக்கும் விதமாக பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை ஏதும் தாக்கல் செய்யப்படாத சூழ்நிலையில் அந்த சொத்தில் பிரதிவாதிக்கு எந்தவித சட்டப்படியான உரிமையும் கிடையாது. எனவே, வாதி இவ்வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள வசப்பரிகாரமானது வாதிக்கு கிடைக்ககூடியது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து தீர்வு காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. பிரதிவாதி தாவா சொத்தினை வாதியின் வசம் 3 மாத காலத்திற்குள் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (29.06.2017) அவையறிய பகரப்பட்டது.

*(Sd/- S. Somasundaram)*
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி

## பின் இணைப்பு :-

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி :-**

வா.சா.1 ராஜேஸ்வரி (வாதி)

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | 21.03.2007 | தாவா சொத்தானது வாதியின் மகன் திருக்குமரன் பெயரில் கிரயம் வாங்கப்பட்டதற்குரிய அசல் கிரய ஆவணம் |
| 2. வா.சா.ஆ.2 | ----- | திருக்குமரன் பெயரில் ஏற்பட்ட அடங்கல் பதிவேட்டு நகல் |
| 3. வா.சா.ஆ.3 | ---- | தாவா சொத்திற்குரிய சிட்டா நகல |
| 4. வா.சா.ஆ.4 | ---- | திருக்குமரனின் இறப்புச்சான்றிதழ் |
| 5. வா.சா.ஆ.5 | ---- | திருக்குமரனின் இறப்புச்சான்றிதழ் |

*(Sd/- S. Somasundaram)*
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி